மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 22/2021 நாள்– 12.04.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.A.C. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– முத்துப்பாண்டி (வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 23.9.1998– தபசில் 1வது இலக்க சொத்தை 2ம் வாதியின் தந்தை ஜெயகுருநாதனுக்கு வையப்பக்கவுண்டர் மகன்களான சின்ன வெள்ளைச்சாமி, பெருமாள்சாமி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பரிவர்த்தனை பத்திரம் – S.R.O. நகல் – வா.சா.ஆ.1

2) 22.2.2008 – தபசில் சொத்தில் 1 ஏக்கர் 30 செண்டினை 2ம் வாதியின் தந்தை ஜெயகுருநாதன் 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் – அசல் – வா.சா.ஆ.2

3) 24.3.2009– தபசில் 2வது இலக்க சொத்தை பொறுத்து 2ம் வாதியின் தந்தை ஜெயகுருநாதன் 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் – அசல் – வா.சா.ஆ.3

4) 24..2009 – தபசில் 3 வது இலக்க சொத்தினை 2ம் வாதி 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரியான வெள்ளத்தாய் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் – SRO நகல் – வா.சா.ஆ.4

5) 13.10.2010 – தபசில் 3 வது இலக்கச் சொத்தைப்பொறுத்து 2ம் வாதி 3ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் – அசல் – வா.சா.ஆ.5

6) 29.9.2010 – தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதியின் பெயரில் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு – அசல் – வா.சா.ஆ.6

7) 11.10.2012–12.8.2014 – தபசில் சொத்துக்களுக்கும் மற்றும் இதர சொத்துக்களுக்கும் 2ம் வாதியின் தந்தை ஜெயகுருநாதனும், 2ம் வாதியும் செலுத்திய தீர்வை இரசீதுகள் (எண்ணம் – 6) – அசல் – வா.சா.ஆ.7

8) 13.5.2015 – வெள்ளத்தாய் பிறப்பு சான்றிதழ் – கணினி நகல் – வா.சா.ஆ.8

9) 23.8.2019 – பட்டா எண்.1027 – கணினி நகல் – வா.சா.ஆ.9

10) 6.1.2021 – தபசில் சொத்தைப் பொறுத்து 2ம் வாதி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவினை எதிர்த்து விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த சீராய்வு மனு – கையிருப்பு நகல் – வா.சா.ஆ.10

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)